# நன்றியுரை

**“ஆண்டாள் பிரியதர்ஷினியின் படைப்புக்கலை”** என்னும் தலைப்பில், முனைவர் பட்ட ஆய்வு செய்ய அனுமதியளித்த மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன். அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரியில் முழு நேர முனைவர் பட்ட ஆய்வு செய்ய அனுமதியளித்த கல்லூரி நிர்வாகத்தினருக்கும், கல்லூரியின் **முன்னாள் முதல்வர் முனைவர் ச.சேவகபாண்டியன், எம்.எஸ்சி., எம்.ஃ.பில்., பிஎச்.டி., இந்நாள் முதல்வர் முனைவர் சோ. பாஸ்கரன், எம்.எஸ்சி., பிஎச்.டி.,** அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வை மேற்கொள்வதற்கு எனக்கு மேற்பார்வையாளராக இருந்து ஆய்வுத்தளத்தின் பல்வேறு கோணங்களைப் புலப்படுத்தி, வழிகாட்டியும், ஆய்வின் அனைத்து நிலைகளிலும் ஊக்கம் அளித்தும் ஆய்வு செம்மையாக நிறைவுற பல்லாற்றானும் இன்முகத்துடன் உதவியும், என்னை நல்வழிப்படுத்தி எனக்கு என்றென்றும் முன்மாதிரியாகத் திகழும் ஆசான் முதுகலைத் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் **சு. நயினார் எம்.ஏ., பி.எட்., எம்.ஃ.பில்., பிஎச்.டி.,** அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

என் ஆய்வு குறித்த ஐயங்களுக்கு விளக்கமளித்து உதவிய முன்னாள் முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர், முனைவர் **பு.சி. கணேசன், எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எட்., பிஎச்.டி.,** அவர்களுக்கும், இன்றைய முதுகலைத் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர். **க. சிவனேசன், எம்.ஏ., எம்.ஃ.பில்., பி.எட்., பிஎச்.டி.,** அவர்களுக்கும், மற்றும் முதுகலை, இளங்கலைத் தமிழ்த்துறையில் பணியாற்றக்கூடிய பிற, பேராசிரியர்கள் அனைவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஆய்விற்கு வேண்டிய நூல்களை வழங்கிய அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி நூலகர் **திரு. காசிராஜன் எம்.ஏ., எம்.எல்.ஐஎஸ்., எம்.ஃ.பில்., பி.சி.டி.சி.ஏ.,** அவர்களுக்கும் மற்றும் நூலகத்தில் பணி புரியும் அத்துணை உள்ளங்களுக்கும் என் மனமார்ந்த நன்றி.

ஆய்வு தொடர்பான கருத்துக்களை என்னோடு பகிர்ந்து கொண்டு ஆய்வேடு நிறைவுற அன்போடு துணைபுரிந்த முனைவர் பட்ட ஆய்வாளர் அனைவருக்கும் எனது நன்றியை உரித்தாக்குகிறேன்.

உரிய காலத்தில் இவ்வாய்வேட்டினை நல்ல முறையில் கணிப் பொறியில் தட்டச்சு செய்து வடிவமைத்துக் கொடுத்த **பொன்மணி கம்ப்யூட்டர்ஸ்** நிறுவனத்தார் அவர்களுக்கும் என் நன்றியைத் உரித்தாக்குகிறேன்.



என் வாழ்க்கையில் கல்வி என்னும் விளக்கை ஏற்றி வைத்து, நான் விரும்பும் கல்விப்பாதையில் பயணம் செய்வதற் குப் பேருதவி புரியும் என் உயிரினும் மேலான பெற்றோர் என் தந்தை உயர்திரு கா. கருப்பையா அவர்களுக்கும், தாய் திருமதி. க. குருவம்மாள் அவர்களுக்கும், மற்றும் என் இரு கண்களாகத் திகழும் உடன்பிறப்புக்களான க. முருகேசன், க. சீனிவாசன் அவர்களுக்கும், மற்றும் சிறு சிறு உதவிகள் செய்த என் அன்பிற்குரிய எங்கள் குடும்பத்து மழலைச் செல்வங்களான மு. முத்துக்குமார், மு. நிறைபாண்டியன், சீ. யோகேஷ் அவர்களுக்கும், மற்றும் என் குடும்பத்தார் அனைவருக்கும் என் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவகாசி,                                  இவண்,

30.11.2011.

(க. ரெங்கலெட்சுமி).